அப்போஸ்தலனான யோவான் எழுதின 1,2,3 நிருபங்கள்

- தேவன் ஒளியாய், அன்பாய், ஜீவனாய் இருக்கிறார்

ஆக்கியோன்

- இயேசுவின் இறுதியான பந்தியின்போது அவரது மார்பில் சாய்ந்திருந்த அன்பான சீஷன் யோவான் (யோவா 13:23)
- யோவான், இயேசு சிலுவையில் அறையப்பட்டபோது சிலுவையின் அருகில் நின்றவர்: இயேசு இவரிடம் தனது தாயை ஒப்படைத்தார் (யோவா 19:26-27)
- பேதுருவோடும் இவரும் உயர்த்தெழுந்த நாளின் காலையிலே இயேசுவின் கல்லறை காலியாயிருப்பதற்கு சாட்சிகளாயிருந்தார் (யோவா 20:2-10)
- உயிர்த்தெழுந்த இயேசு கடலருகே நெருப்பு மூட்டியிருந்ததை கண்டவர்களில், அவரோடு பேசியவர்களில், அவரோடு உணவருந்தியவர்களில் யோவானும் இருந்தார் (யோவா 21:7,20)
- ஆகவே அவரும் மற்றவர்களும் கண்டதையும், கேட்டதையும், நோக்கிப் பார்த்ததையும், கைகளினால் தொட்டதையும் குறித்து எழுத எல்லாவிதத்திலும் தகுதிபடைத்தவர் இவர்.
    - 1 யோவான் - அதிகாரங்கள் 5 வசனங்கள் 105
    - 2 யோவான் - அதிகாரங்கள் 1 வசனங்கள் 13
    - 3 யோவான் - அதிகாரங்கள் 1 வசனங்கள் 14

1 யோவான் - தேவனுடைய சுபாவம்

இந்த நிருபத்தை எழுதுவதற்கான காரணத்தை யோவான் அடிக்கடி குறிப்பிடுகிறார்

- உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி இவைகளை உங்களுக்கு எழுதுகிறோம் 1:4
- நீங்கள் பாவஞ்செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன் 2:1
- உங்களை வஞ்சிக்கிறவர்களைக்குறித்து இவைகளை உங்களுக்கு எழுதியிருக்கிறேன் 2:26
- உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று நீங்கள் அறியவும்,... எழுதியிருக்கிறேன் 5:13
- தேவகுமாரனுடைய நாமத்தின்மேல் நீங்கள் விசுவாசமாயிருக்கவும்,... எழுதியிருக்கிறேன் 5:13

இந்த முதலாவது நிருபத்தில் யோவான் தேவனை மூன்று பரிமாணங்களில் காண்பிக்கிறார்.

1. ஒளி 1:5-7
2. அன்பு 3:11-5:12
3. ஜீவன்

- யோவானின் சுவிஷேசம் விசுவாசித்து ஜீவனை அடையும்படி எழுதப்பட்டது (யோவா20:30-31)
- அந்த ஜீவனின் தன்மையை மேலும் விளக்குவது யோவானின் முதலாவது நிருபம் (3:14)

2 யோவான் - கள்ளப் போதகர்கள் குறித்த எச்சரிக்கை

- யோவானின் இரண்டாவது நிருபம் "தெரிந்துகொள்ளப்பட்டவளுமாகிய அம்மாளுக்கும் அவளுடைய பிள்ளைகளுக்கும்" எழுதப்பட்டது.
- இது சபையின் முக்கியஸ்தர்களில் ஒருவராக இருந்த பெண்ணாக இருக்கலாம் அல்லது உள்ளூர் சபையை குறிக்கப் பயன்பட்ட ஒரு குறியீட்டுச் சொல்லாக இருக்கலாம்.
- அந்தநாட்களில் சபை உபத்திரவப்படுத்தப்படுத்தபட்டபோது வாழ்த்துதல் சொல்ல இம்மாதிரியான குறியீட்டுச் சொற்கள் பயன்படுத்தப்பட்டன.
- 1 யோவான் தேவனுடனான நமது ஐக்கியத்தை குறித்து பேசியது. 2 யோவான் அந்த ஐக்கியத்தை தவறான உபதேசத்தை போதிப்பவர்களிடமிருந்து பாதுகாப்பதை குறித்து பேசுகிறது.
- கிபி 1வது நூற்றாண்டிலே சபையானது அன்றிருந்த உலகத்தின் பலபாகங்களிலும் பரந்து விரிந்து வளர்ந்தது (அப்8:5, ரோம10:14-18, கொலோ 1:5-6,23)
- அதற்கான முக்கிய காரணங்களிலொன்று ஆரம்பகால கிறிஸ்தவர்களின் உபசரிப்பு.
- பவுல் தங்களது வீடுகளை அவருக்காக திறந்துகொடுப்பவர்களை சார்ந்து பயணத்தை மேற்கொண்டார் பிலே 1:22
- திருவசனத்தை உபதேசிக்கிறவர்களை தாங்கும்படி பவுல் உற்சாகப்படுத்துகிறார் கலா 6:6

2 யோவான் - கள்ளப் போதகர்கள் குறித்த எச்சரிக்கை

- மிஷனரிகளாக வருபவர்கள் தங்குவதற்கு வசதி செய்யவும், அவர்களை ஆதரிக்கவும் யோவான் கட்டளையிட்டு உற்சாகப்படுத்துகிறார் 3யோவா 1:5-8
- இவ்வாறு உபசரிப்பதில் உள்ள ஆபத்துக்களில் ஒன்று தவறான போதகர்களையும் அவர்கள் பரப்பும் உபதேசங்களையும் ஆதரிக்க வேண்டிவரலாம்.
- அந்நியர்களை உபசரிக்கிற கிறிஸ்தவர்களின் நற்பண்பை இந்த தவறான போதகர்கள் இலகுவாக தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக்கொள்வார்கள்.
- ஆகவே கிறிஸ்தவர்களுக்கு இதை முன்னிட்டு தகுந்த ஆலோசனை வழங்கும்படி சரியான நபர்களை கண்டறிந்து உபசரிக்கும்படி எச்சரிக்கிறார்.
- தவறான போதகர்களை குறித்து எச்சரிக்கும்போது ஒருபடி மேலே சென்று அவர்களை
- வீட்டிலே ஏற்றுக்கொள்ளாமலும், வாழ்த்துதல் சொல்லாமலும் இருங்கள் என்று சொல்லுகிறார்.
- இவ்வாறு செய்வதால் தீங்கு செய்கிறவர்களிடமிருந்து விசுவாசி விலகியிருக்க முடியும். தவறான, துர்உபதேசங்களில் இருந்து விசுவாசிகளை காக்க விரும்பினவராய் இதை எழுதினார்.

3 யோவான் - கள்ளப் போதகர்கள் குறித்த எச்சரிக்கை

- எதிர்ப்புகள் மத்தியிலும் உண்மையாயிருத்தல் என்பதே யோவானின் மூன்றாவது நிருபத்தின் கருப்பொருள்.
- இந்த நிருபத்தின் பெறுநரான காயு குழப்பம் விளைவிக்கிறவனான தியோத்திரேப்புக்கு முகம்கொடுக்க வேண்டியவனாக இருந்தார்.
- இந்த நிருபம் மூன்று நோக்கங்களை கொண்டது. ஒவ்வொன்றும் பெயர் குறிப்பிட்ட மூன்று நபர்களை சார்ந்தது
- காயு வந்த போதகர்களுக்கு ஆதரவு செய்தது சரியானது என்று உறுதிப்படுத்தவும் அவ்வாறு தொடர்ந்து செய்ய உற்சாகப்படுத்தவும் எழுதினார் 1:5-8
- தியோத்திரேப்பு யோவானையும் மற்றவர்களையும் ஏற்றுக்கொள்ளாததை கண்டிப்பதற்காக எழுதினார். 1:9-10
- தேமேத்திரியுவின் நற்குணத்தை உதாரணமாக காண்பித்து காயுவும் நன்மையானதை பின்பற்ற கட்டளையிட்டு எழுதினார் 1:11-12
- கருப்பொருள்: 11வது வசனம் “தீமையானதைப் பின்பற்றாமல், நன்மையானதைப் பின்பற்று

1 யோவான் - ஒரு பார்வை

- முன்னுரை : ஜீவனுள்ள வார்த்தை (1:1-4)

1. தேவன் ஒளியாய் இருக்கிறார் (1:5-3:10)

- ஒளியில் நடவுங்கள் (1:5-2:2)
- அன்பின் கட்டளைக்கு கீழ்ப்படியுங்கள் (2:3-11)
- உங்கள் ஆவிக்குரிய நிலையை அறியுங்கள் (2:12-14)
- விசுவாசத்தின் எதிரிகளை குறித்து எச்சரிக்கையாயிருங்கள் (2:15-27)
- தேவனுடைய பிள்ளைகளைப்போல வாழுங்கள் (2:28-3:10)

2. தேவன் அன்பாய் இருக்கிறார் (3:11-5:12)

- ஒருவரிலொருவர் அன்பாய் இருங்கள்: பகுதி 1 (3:11-24)
- உங்கள் ஆவியை சோதித்துப்பாருங்கள் (4:1-6)
- ஒருவரிலொருவர் அன்பாய் இருங்கள்: பகுதி 2 (4:7-21)

1. தேவன் உங்களை நேசிக்கிறதினால் நீங்கள் மற்றவர்களை நேசியுங்கள் (4:7-10)
2. தேவன் உங்களுக்குள் இருப்பதினால் நீங்கள் மற்றவர்களை நேசியுங்கள் (4:11-21)

- தேவனுக்கு கீழ்ப்படிந்திருந்து விசுவாசத்தின் வெற்றியை பெறுங்கள் (5:1-5)
- குமாரனில் விசுவாசமாயிருந்து நித்திய ஜீவனை அடையுங்கள் (5:6-12)

முடிவுரை: தேவனுடைய பிள்ளையின் நம்பிக்கையும் சுபாவமும் (5:13-21)

- நித்திய ஜீவன் உண்டென்று அறியுங்கள் (5:13)
- ஜெபத்தில் நம்பிக்கையாயிருங்கள் (5:14-17)
- பாவத்தில் தொடர்ந்து இராதிருங்கள் (5:18-20)
- விக்கிரகங்களுக்கு விலகியிருங்கள் (5:21)

2,3 யோவான் - ஒரு பார்வை

2 யோவான் - ஒரு பார்வை

- வாழ்த்துக்கள்: மூப்பனின் அன்பு (1:1-3)
- மூப்பனின் சந்தோஷமும் விண்ணப்பமும் (1:4-6)
- மூப்பனின் கவலை (1:7-8)
- மூப்பனின் எச்சரிக்கை (1:9-11)
- முடிவுப்பகுதி: மூப்பனின் பிரியாவிடை (1:12-13)

3 யோவான் - ஒரு பார்வை

- மிகுந்த மகிழ்ச்சியோடு வாழ்த்துக்கள் (1:1-4)
- காயுவுக்கான உறுதிப்படுத்துதல் (1:5-8)
- தியொத்திரேப்புவுக்கான கண்டனம் (1:9-10)
- தேமேத்திரியுக்கான பாரட்டு
- முடிவுக் குறிப்புகள் (1:13-14)